பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

21.08.2025 7 15

வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

2. அசாமில் அமைக்கப்பட உள்ள இந்திய நிர்வாகவியல் மையம் மூலம் நாட்டில் கல்வி உள்கட்டமைப்பு மேம்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. கடந்த நிதியாண்டில் இந்தியா-ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகம் 68 பில்லியன் டாலர் அளவிற்கு நடைபெற்றுள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. தூர்தர்ஷன் இலவச DTH சேவையில் தற்போது 510 அலைவரிசைகள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

5. ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கணேஷ் குப்தா - Gamberya Gowda இணை தங்கப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 25ஆம் தேதி கடைசி நாளாகும்.

அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

இதற்கிடையே ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி கூட்டணி வேட்பாளர் திரு. பி. சுதர்சன் ரெட்டி இன்று வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

முன்னதாக தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

<<<<>>>>

அசாமில் இந்தியா நிர்வாகவியல் மையம் அமைக்கப்படுவதன் மூலம் கல்வி உள்கட்டமைப்பு மேம்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அசாமில் இந்தியா நிர்வாகவியல் மையம் ஏற்படுத்துவதற்கு வகை செய்யும் மசோதா குறித்து மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானின் சமூக வலைதளப் பதிவை பகிர்ந்துள்ள பிரதமர், இந்தப் புதிய கல்வி நிறுவனம் மூலம்

நாடு முழுவதும் உள்ள மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக அசாம் மக்களுக்கு வாழ்த்துக் தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் பிரதமர், முதலமைச்சர், அமைச்சர் ஆகியோர் அரசை இயக்குவது சரியா என்பது குறித்து நாட்டின் மக்கள் தற்போது தீர்மானிப்பது அவசியம் என்று மத்திய உள்துறை திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், அரசியலில் நேர்மையையும், தார்மீக பொறுப்புகளையும் கடைபிடிக்கும் வகையில் குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு 30 நாட்கள் சிறையில் இருக்கும் பிரதமர், முதமைச்சர் மற்றும் அமைச்சர்களை பதவிநீக்கம் செய்வதற்கான அரசியல் சாசன திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்ட முதலமைச்சர் அல்லது அமைச்சர்கள் அண்மைக் காலமாக ராஜினாமா செய்யாமல் சிறையில் இருந்தபடியே அரசை தொடர்ந்து இயக்கியது அதிர்ச்சியளித்ததாக திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<>>>>

கடந்த 4 ஆண்டுகளில் இந்தியா-ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகம் 5 மடங்கு அதிகரித்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் நடைபெற்ற இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

இந்தியா-ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகம் 2021ஆம் ஆண்டில் 13 பில்லியன் டாலராக இருந்த நிலையில் அது கடந்த நிதியாண்டில் 68 பில்லியன் டாலர் அளவிற்கு அதிகரித்ததாக தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமைக்கப்பட்டு வரும் சிறிய வகை செயற்கைக்கோள் ஏவுதளத்திற்கு இதுவரை 389 கோடி ரூபாய்

செலவிடப்பட்டுள்ளதாக மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், அடுத்த நிதியாண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள குலசேகரப்பட்டினம் ஏவுதளத்திற்கு மொத்தம் 985 கோடியே 96 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக கிழக்கு கடற்கரை சாலையில் மாற்றுப்பாதை அமைப்பதற்கான நிலம் தவிர்த்து மற்ற பணிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் இந்த தளத்தின் தொழில்நுட்ப வசதிகளுக்கான உள்கட்டமைப்பு பணிகள் தொடங்கியுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

இலவச DTH சேவையில் தற்போது 510 அலைவரிகைள் ஒளிபரப்பப்படுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இலவச DTH சேவையில் 92 தனியார் அலைவரிசைகளும், 50 தூர்தர்ஷன் அலைவரிசைகளும், 320 கல்வி அலைவரிசைகளும் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

FM கோல்டு, ரெயின்போ, விவித் பாரதி உள்ளிட்ட 48 ஆகாஷ்வாணி அலைவரிசை சேவைகளும் கிடைப்பதாக அவர் கூறினார்.

2019ஆம் ஆண்டிற்குப் பிறகு 264 சமுதாய வானொலி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், 6 புதிய தூர்தர்ஷன் அலைவரிசைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 5 ஆண்டுகளாக 26 சமுதாய வானொலி நிலையங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

வங்கிகளில் மக்கள் வங்கிக் கணக்குகளை பராமரிப்பது மற்றும் புதுப்பித்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தருமபுரி மாவட்டத்தில் நேற்று நடைபெற்றது.

அரூர் வட்டம் சில்லார அல்லி பகுதியில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு முகாமில் ரிசர்வ் வங்கி சென்னை மண்டல இயக்நர் திருமதி உமா சங்கர் பங்கேற்று

வங்கிகளின் செயல்பாடுகள் மற்றும் பொதுமக்கள் அணுக வேண்டிய முறை குறித்து விளக்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

(Voice Byte - Uma Shankar - 53 Sec)

<<<<>>>>

விவசாயிகளின் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் தேசிய வேளாண் சந்தை திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயனடைந்து வருவதாக வேளாண் வணிக துணை இயக்குநர் திருமதி மெர்சி ஜெயராணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte - 1 - Jayarani - 25 Sec)

இந்த தேசிய வேளாண் சந்தை திட்டம் தங்களுக்கு பெரும் பயனளிப்பதாக மதுரை வாடிப்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வந்திருந்த தென்னை விவசாயிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(Voice Byte - 2 - Public - 39 Sec)

<<<<>>>>

ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கணேஷ் குப்தா - Gamberya Gowda இணை தங்கப் பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் இளையோர் கலப்புக் குழு பிரிவில் இந்த இணை 16-14 என்ற புள்ளிக் கணக்கில் ஈரான் இணையை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

கலப்புக் குழு பிரிவில் Suruchi - Saurabh Chaudhary இணை வெண்கலப் பதக்கம் வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 9 தங்கம், 5 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

-----------

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tapsya தங்கப்பதக்கம் வென்றார்.

பல்கேரியாவின் Samokov-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் அவர், நார்வேயின் Felicitas Domajeva-வை 5-2 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மகளிர் 68 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் Srishti வெள்ளிப் பதக்கம் வென்றார்.

76 கிலோ எடைப் பிரிவில் பிரியா மாலிக்கும், 55 கிலோ எடைப் பிரிவில் ரீனாவும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

-------------

தேசிய ஆடவர் ஜூனியர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் ஹரியானா, உத்தரப்பிரதேசம், ஒடிசா மற்றும் பஞ்சாப் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

ஜலந்தரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டங்களில் ஹரியானா 3-2 என்ற கோல் கணக்கில் கர்நாடகாவையும், உத்தரப்பிரதேசம் 2-1 என்ற கோல் கணக்கில் மத்தியப்பிரதேசத்தையும் வென்றன.

மற்ற காலிறுதிப் போட்டிகளில் ஒடிசா 9-0 என்ற கோல் கணக்கில் மணிப்பூரையும், பஞ்சாப் 4-1 என்ற கோல் கணக்கில் ஜார்கண்டையும் வென்றன.

<<<<The End>>>>